# திருக்குறளில் தனிமனித அளவிலான மென்மையியல்

முனைவர் தா.லதா
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.
lathahcc2006@gmail.com

9

**முன்னுரை**

திருக்குறள் வெண்பா செய்யுட்களால் அமையப் பெற்ற தற்சார்பற்ற நூல். திருக்குறளின் பெருமையினை அதன் பொதுத்தன்மையிலிருந்து அறிய முடியும். இத்தன்மை தான் திருவள்ளுவரை எல்லாக்காலத்திற்கும், எல்லா சமயத்திற்கும், எந்நாட்டவர்க்கும் உரிய நீதிகளை எடுத்துரைப்பவராக அடையாளம் காட்டுகிறது. குறள் பாடல்களின் நுட்பமும் செப்பமும் சீர்மைமிகு கருத்துக்களும் பலதலைமுறை கவிஞர்களையும் வியப்படைய வைக்கிறது. அடிப்படையில் தனிமனித ஒழுக்கத்தை திருக்குறள் வலியுறுத்துகிறது. தனிமனித ஒழுக்கமே குடும்ப ஒழுக்கமாக பரிணாமம் அடைகிறது. அதிலும் இரக்கம், விருந்தோம்பல் இவற்றை வலியுறுத்துவதைக் காணலாம்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழினத்திற்குக் கிடைத்துள்ள ஒரு தனக்குவமை இல்லா இலக்கியமாகிய திருக்குறளில் அமைந்துள்ள அன்பு, இனிய சொல் கூறுதல், அடக்க உள்ளத்தோடு வாழுதல், விருந்தோம்பும் பண்பு, ஒப்பரவு அறிதல், வாழ்விற்குத் தேவையான நட்பு இவற்றின் கருத்துக்கள் எவ்வாறு ஒரு தனிமனிதன் மென்மையான குணநலன்களோடு வாழ வழி வகுக்கிறது என்பதை ஆராய இக்கட்டுரை முயன்றுள்ளது.

**அன்புடைமை**

பிறவியின் பயனே அன்புடைமை என்று வலியுறுத்தி, பெறுதற்கரிய மனித உருவெடுத்து இந்த உலகில் நாம் வந்ததற்கு காரணமே மற்ற உயிர்களின் மேல் நாம் அன்பு செலுத்துவதற்கே அன்றி வேறு எதற்கும் இல்லை. மற்ற உயிர்களின் மேல் அன்பு செலுத்துவதற்கு இந்த மனிதப் பிறவி ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதையே,

**“அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”[1]**

**(அன்புடைமை 80)**

அன்பையே தங்களது தலைசிறந்த உணர்வாக கொண்டு அன்பின் வழி ஒழுகுவாருடைய உடம்புகள் உயிர் நிலைத்து வாழும் உடம்புகளாகும் அன்பு இல்லாதவருடைய உடம்புகள் எலும்பைத் தோலால் போர்த்து மூடி வைத்துள்ள வெற்றுடம்புகளாகும் என்ற குறளின் சிந்தனையை தனிமனிதன் உள்வாங்கும் போது, அவனது மனது மென்மைத் தன்மையாகும். வன்மையும், வன்முறைகளும் ஒழியும். தனிமனித மாற்றமே உலகின் மாற்றமாக அமைய, தலைச்சிறந்த ஆயுதமாகிய அன்பை கையில் எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறார். எனவே, வாழ்வு அர்த்தமுடையதாய் இருக்க வேண்டும் என்றால், அன்பு நிறைந்ததாய், அதுவும் அகத்தே அன்பு நிறைந்ததாய் இருக்க வேண்டும்.

**இனியவை கூறல்**

இறைவன் தனது படைப்புகளில் மனிதனுக்கு மட்டுமே பேசும் திறனை வழங்கியுள்ளார். பேசும் ஆற்றல் பெற்ற மனித இனம் கடுஞ்சொற்களைத் தவிர்த்து இனிய சொற்களைப் பேசினால் நலமாக எல்லா செயல்களும் நடக்கும் என்பதை சுட்டவே,

**“இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று”[2]**

**(இனியவைக் கூறல் 100)**

இனிய சொற்களைப் பேசும் திறனுடைய நாம், கடுஞ்சொற்களைக் கூறுதல் நல்ல பழங்கள் இருக்கும் போது நச்சுக் காய்களை உண்பது போலாகும்.

இனிய சொற்களைப் பேசுவதே தனிமனிதனின் தனித்துவம். அதைத் தவிர்த்து கடுஞ்சொற்களையும், தகாத சொற்களையும் கூறினால் கேட்பவரின் மனம் காயப்படுத்தும் கடினமான சொற்களை பயன்படுத்த வேண்டாம் என நம்மிடம் கூறுகிறார் வள்ளுவர். ஆதலால் துன்பம் தரும் சொற்களைத் தவிர்த்து, பிறருக்கு இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசினால் உள்ளம் உவகை கொள்ளும். இதனை கடைபிடிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

**அடக்கமுடைமை**

மனித உயிர்கள் இன்பமாய் வாழ, துன்பம் அருகே வராமல் அரண் அமைத்துக் கொள்ளும் வழி என்பது ஒருவனுக்கு இருக்க வேண்டியஅ டக்கம் என்ற பண்பு. மனதை மட்டும் அல்லாமல் ஐம்புலன்களையும் அடக்கினால் ஆபத்திலிருந்து நீங்கலாம் எனும் உண்மையை,

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து"[3]**

**(அடக்கமுடைமை 126)**

தீங்கு வரும் போது தனது தலை மற்றும் நான்கு கால்களை ஆமை தனது ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வதைப் போல, ஒருவன் தனது ஐம்புலன்களையும் அறத்திற்கு மாறான தீய செயல்களில் செல்லாமல் அடக்கிக் கொண்டால் துன்பம் அணுகாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடியும்.

புலன்களையும் அடக்குவதால் மனம் நல்வழிச் செல்லும், மனம் நல்வழிச் செல்வதால் அறத்தின் பயன் கிடைக்கும். ஐம்புலன்களையும் அடக்கினால் இம்மையில் மட்டுமல்லாமல் மறுமையிலும் இன்பமே எனும் பண்பை இக்குறள் எடுத்துரைக்கிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் தலைச்சிறந்த பண்பு விருந்தோம்பல். விருந்தினரின் வருகை குடும்பத்தில் மகிழ்வை ஏற்படுத்தும் ஒவ்வொரு மனிதனும் உறவை ஆழப்படுத்த, அர்த்தமுள்ளதாக மாற்ற மற்றவரோடு உறவு கொள்ள விருந்தோம்பல் அவசியம்,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகதிரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"[4]**

**(விருந்தோம்பல் 90)**

தொட்டு முகர்ந்து பார்த்தால் தான் அனிச்ச மலர் வாடும். ஆனால், முகம் வேறுபடுவதை பார்த்த உடனேயே விருந்தினரின் மனமும், முகமும் வாடி விடும்.

அனிச்சம் என்விற மலர் வள்ளுவர் காலத்தில் இருந்த மென்மையான மலர். உன்றுக்கு மேற்பட்ட இடங்களில் (அனிச்சமும் அன்னத்தின் தூவியும் 1120) இந்த மலரைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார். இந்த மலரை யாரும் செடியிலிருந்து பறித்து

தலையில் சூட முடியாது. ஏனென்றால் அவ்வளவு மென்மையானது. நுகர்ந்து பார்க்கும் பொழுதே வாடிவிடும். விருந்தினர்கள் அனிச்ச மலரை விட மென்மையானவர்கள். உபசரிப்பவர்களின் முகத்தோற்றத்தில் மாற்றத்தைக் கண்ட அளவில் மனம் வாடிவிடுவார்கள். விருந்தோம்பல் என்பது தமிழர்களிடம் தொன்றுதொட்டு இருந்து வரும் பண்பாடு, இன்முகம் காட்டி, இனிய சொல் கூறி இனியவை ஆற்றல் என விருந்தோம்பல் மூன்று வகையான கூறுகளுக்குள் அடங்கும். இந்த மூன்றில் ஒன்று வேறுபட்டாலும் விருந்தினரை முழுமையாக உபசரித்தது ஆகாது.

இன்முகம் காட்டினால் மட்டும் போதாது, இனிய சொல் பேசி நலம் விசாரிக்க வேண்டும் அவர்களது தேவையை அறிந்து உபசரிக்க வேண்டும். மனம், மொழி, செயல் மூன்றிலும் இனிமை நிறைந்திருக்க வேண்டும்.

**ஒப்புரவு அறிதல்**

ஒருவர் மற்றவருக்கு உதவுதல் என்பது அவர் நமக்குத் திரும்ப உதவி செய்வார் என்று எதிர்பார்த்து இருத்தல் கூடாது. சான்றோர்கள் மற்றும் கற்றுத் தேர்ந்தவர்கள் செய்யும் உதவியும் எதையும் எதிர்பார்க்காத மழை மேகம் செய்வதைப் போன்ற உதவியாகவே இருக்க வேண்டும் என்பதை,

**“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு”[5]**

**(ஒப்புரவு அறிதல் 211)**

மேகங்கள் போல இருப்போம். அனைவருக்கும் பலனை எதிர்பார்க்காமல் உதவி செய்வோம்.

**“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்**
**பேரறி வாளன் திரு”[6]**

**(ஒப்புரவு அறிதல் 215)**

தாம் படித்த அறிவு, தனது அனுபவ அறிவு என்கிற இரண்டையும் கொண்டு, உலகில் அறவழிப் படி மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தி வாழ்பவர்களிடம் இருக்கும் செல்வம் ஊரின் நடுவே உள்ள குளத்தில் நீர் நிறைந்திருப்பதற்கு ஒப்புமையாகும். எல்லோருக்கும் உதவும் மனப்பான்மை உடையவரிடம் பணமும், பொருளும் சேர்ந்தால்,

அனைவருக்கும் மகிழ்ச்சியே.

**நட்பு**

உலகில் மனித குலம் ஒன்றுபட்டு வாழ மிகவும் தேவையான ஒன்று நட்பு. இந்த நட்பு என்ற உறவு தனிமனிதன், குடும்பம், ஊர், நாடு என எந்த நிலையிலும் ஒருவருக்கு வலிமையைச் சேர்க்கும். இளம் பிறை வளர்வது போல நல்லவர்களின் நட்பு வளரும்.

**“நவில்தொறும் நூல்நயம் போலுமு; பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு”[7]**

**(நட்பு 783)**

படிக்கும் போதெல்லாம் இன்பம் தரும் நல்ல நூல்களைப் போல, நல்ல குணங்களை உடையவருடன் கொண்;ட நட்பு, அவரோடு பழகும் பொழுதெல்லாம் மனதுக்கு மகிழ்ச்சி தரும். நல்ல குணம் கொண்டவர்களுடன் மனம் திறந்து பழகி வாழ்வை வளமானதாய் மாற்றுவோம்.

**தொகுப்புரை**

ஒரு மனிதன் நல்லவனாக வாழ்வதற்கு அன்பு அவசியம். ஒப்புரவு என்னும் உதவும் குணமுடையவனாக வாழ்தல் அவசியம். நல்ல நட்பினை தேர்ந்தெடுத்து வாழ்வது தனிமனிதனுடைய தலைச்சிறந்த பண்பு. வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்பதோடு மட்டுமல்லாமல் உபசரித்தலும் மிக அவசியம். பிரதிபலன் எதிர்பாரமல் மழை உயிரினங்களுக்கு உதவுதல் போல நாமும் மனிதர்களுக்கு நம்மோடு வாழும் சக மனிதர்களுக்கு உதவுதல் வேண்டும். ஆகிய நற்பண்புகளை தனிமனித மென்மையின் குணங்களாக திருக்குறள் எடுத்துரைக்கிறது.

திருக்குறளின் அரிய கருத்துக்கள் வாழ்க்கையின் முடிவல்ல. அவை தான் வாழ்க்கையின் அடித்தளம். திருக்Fறளை வாழ்வின் ஆணிவேராகக் கொண்டால் வானுயர வளரமுடியும். நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும், இந்த மனித சமுதாயத்துக்கும் பயன் தரும் வாழ்க்கையை வாழ திருக்குறளை கையில் எடுப்போம். வள்ளவரின் மொழி வாழ்வின் வழி என்பதை உணர்வோம். தனிமனித வாழ்வின் மதிப்பீடுகளை உள்ளடக்கிய உன்னத நூலைப் படித்தால் இளைய சமூகம் தன்னார்வ தொண்டுள்ளம், அன்பு, இரக்கம், மன்னிப்பு இவற்றில் தலைச்சிறந்து விளங்கும்.

**சான்றெண் விளக்கம்**

1. அன்புடைமை - குறள் எண் 80
2. இனியவை கூறல் - குறள் எண் 100
3. அடக்கமுடைமை - குறள் எண் 126
4. விருந்தோம்பல் - குறள் எண் 90
5. ஒப்புரவு அறிதல் - குறள் எண் 211
6. மேலது - குறள் எண் 215
7. நட்பு - குறள் எண் 783

**முதன்மை நூல்**


1. திருக்குறள் - திருவள்ளுவர்
நர்மதா பதிப்பகம்
10, நானா தெரு
தியாகராய நகர்
சென்னை – 600 017.